ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2363/52 - 2023 දෙසැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.12.21
*2363/52 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்

(அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 05/2023)

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழான பின்வரும் தீர்மானம் 2023, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற பொதுவமர்வில் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கே. எம். மகிந்த சிறிவர்தன,**
செயலாளர்,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, திசெம்பர் 21.

**தீர்மானம்**

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழ் இத்தீர்மானம் வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்படுகின்ற தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) இன் கீழான சுங்க இறக்குமதித் தீர்வையானது, இங்குள்ள அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு விடயத்திலும், அட்டவணையின் 5 ஆம் நிரலின் நேரொத்த பதிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொதுவான விலையிலான இறக்குமதித் தீர்வையினை அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை "அ" இன் ஏற்பாடுகளின் கீழ் எங்கெல்லாம் முன்னுரிமை விலையானது அறவிடப்பட்டு செலுத்தப்படக் கூடியதாகவுள்ளதோ அங்கே, அட்டவணையின் 4 ஆம் நிரலில் நேரொத்த பதிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னுரிமை விலையில் விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *இ. மு. தலைப்பு (1)* | *இ. மு. குறியீடு (2)* | | *விபரம் (3)* | *சுங்கத் தீர்வை* | | *அளவுக் கூறு (6)* |
|---|---|---|---|---|---|---|
| | | | | *முன்னுரிமை (4)* | *பொது (5)* | |
| ***11.01*** | *1101.00* | | **கோதுமை அல்லது மெஸ்லின் மா** | | | |
| | *1101.00.10* | --- | கோதுமையின் | (PK) இலவசம் | *20% அல்லது கி. கி. இற்கு ரூ. 27/-* | *கி. கி.* |

EOG 12-0347